## காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் 30.06.2022 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்டத்தின் தீர்மானம் நகல்

**பொருள் எண் :-1**

**நகர்மன்றத் தலைவர் கொண்டு வரும் தீர்மானம்:**

காயல்பட்டினம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் காலிமனை இடங்களுக்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அந்த மனையின் உரிமைதாரரால் காலிமனை வரிகள் செலுத்தப்படாமல் அதிகமான நிலுவை வைத்துள்ளார்கள். மேலும், சொத்து உரிமைதாரர்கள் காலிமனையினை மற்றொருவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிடுவதால் காலிமனை வரியினை வசூல் செய்வதில் மிகவும் சிரமம் ஏற்பட்டு வருகிறது.

மேலும், இந்நகராட்சி பகுதியில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை பொருத்தமட்டில் இந்நகராட்சி மூலம் வரிவிதிப்பு செய்யப்பட்டு கதவு இலக்கங்கள் இடப்பட்ட நிலையில் சொத்து உரிமையாளர்கள் அந்த சொத்தை மற்றொரு நபருக்கு சொத்தை கிரையம் செய்து கொடுக்கும் நிலையில் அந்த இடத்திலுள்ள கட்டிடத்தை மறைத்து காலிமனைநிலம் என்று புதியதாக பத்திரம் பதிவு செய்து வருகிறார்கள் என தெரியவருகிறது. இதனால் இந்நகராட்சியில் இரட்டிப்பு வரிவிதிப்பு ஏற்பட்டு பழைய வரிவிதிப்பு வரித்தொகை நிலுவையில் இருந்து வருகிறது. இதனால் இந்நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது

இந்நகராட்சியின் வருவாய் இழப்பை தடுக்கும் வகையில் இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் புதியதாக மனைப் பிரிவுகள் உருவாக்கி விற்பனை செய்யப்படும் இடங்களுக்கு பத்திரப்பதிவு செய்ய வரும்பொழுது நில உரிமையாளர்களிடம் காயல்பட்டினம் நகராட்சியின் தடையின்மைச்சான்று ( **No Objection Certificate.**) பெற்று பத்திரபதிவு செய்திடுமாறு காயல்பட்டினம் பத்திர பதிவு அலுவலரை இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொண்டு தீர்மானித்தல்.

**தீர்மான எண்.112**

காயல்பட்டினம் நகராட்சியின் வருவாய் இழப்பை தடுக்கும் வகையில் சொத்துக்கள் பெயர் மாற்றம் செய்யப்படும் போதும் மற்றும் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் புதியதாக மனை பிரிவுகள் உருவாக்கி விற்பனை செய்யப்படும் இடங்களுக்கும் நகராட்சியின் தடையின்மைச்சான்று ( **No Objection Certificate.**) பெற்று



CamScanner

பத்திரபதிவு செய்திடுமாறு காயல்பட்டினம் பத்திர பதிவு அலுவலரை இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொண்டு ஏக மனதாக தீர்மானிக்கப்படுகிறது

**ஒம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
காயல்பட்டினம் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்,
காயல்பட்டினம் நகராட்சி